بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّی علی رسوله الکریم　　وعلی عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 15

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ர:.பீக் அஹ்மது

10 ரமலான் 1437 ஹிஜ்ரி கமரி　16 இஹ்ஸான் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி　16 ஜூன் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டதன் காரணமாக இறைவன் எந்த அளவு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றான் என்றால் அப்படிப்பட்டவர்களது பாவங்களை அவன் மன்னிக்கின்றான். அவர்களது நஃப்ஸ் தூய்மையடைவதற்கு அவனே பொறுப்பேற்றுக் கொள்கின்றான். அவ்வாறிருக்க, எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய தேவையில்லை என்று கூறுபவர் எத்தகைய துர்பாக்கியசாலியாக இருக்கின்றார்?**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

قوله تعالیٰ اِنَّ الَّذِيْنَ يَكْفُرُوْنَ بِاللّٰهِ وَرُسُلِهٖ وَيُرِيْدُوْنَ اَنْ يُّفَرِّقُوْا بَيْنَ اللّٰهِ وَرُسُلِهٖ وَيَقُوْلُوْنَ (9)
نُؤْمِنُ بِبَعْضٍ وَّنَكْفُرُ بِبَعْضٍ ۙ وَّيُرِيْدُوْنَ اَنْ يَّتَّخِذُوْا بَيْنَ ذٰلِكَ سَبِيْلًا ۝ اُولٰٓئِكَ هُمُ الْكٰفِرُوْنَ
حَقًّا ۚ وَاَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ۝ وَالَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ وَلَمْ يُفَرِّقُوْا بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ
اُولٰٓئِكَ سَوْفَ يُؤْتِيْهِمْ اُجُوْرَهُمْ

பொருள்: எவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நிராகரித்து மேலும், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்குமிடையே வேற்றுமை பாராட்ட எண்ணி, மேலும் சிலரை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். மற்றுஞ்சிலரை நிராகரிப்போம் அதாவது, இறைவனை ஏற்றுக் கொள்வது அல்லது சில தூதர்கள் மீது நம்பிக்கை கொள்வது மட்டும் போதுமானது. இறைவனுடன் தூதர் மீதும் நம்பிக்கை கொள்வது அல்லது எல்லா நபிமார்கள் மீதும் நம்பிக்கை கொள்வது அவசியமானது அல்ல என்றும் கூறுகின்றனரோ, மேலும், இறைவன் காட்டிய நேர்வழியை விட்டு விட்டு இதற்கிடையில் ஏதேனுமொரு நேர்வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனரோ அவர்களே உண்மையில் முற்றிலும் நிராகரிப்பவர்களாவர். நிராகரிப்பவர்களுக்கு இழிவுபடுத்தக்கூடிய தண்டனையை நாம் ஏற்படுத்தியுள்ளோம். அல்லாஹ்விடத்தும் அவனுடைய தூதர்களிடத்தும் நம்பிக்கை கொண்டு (தூதர்களாகிய) அவர்களுள் எவருக்கிடையிலும் வேற்றுமை பாராட்டாதவர்களுக்கு அதாவது, இறைவன் மீது மட்டும் நம்பிக்கை கொண்டு விட்டு அவனது தூதர்களிடத்து நம்பிக்கை கொள்ளாமல் இருக்கின்ற இத்தகைய வேற்றுமை பாராட்டாதவர்களுக்கு, அவ்வாறே சில தூதர்களை நம்பிக்கை கொண்டு சிலரை விட்டு விலகியிருக்கின்ற அத்தகைய வேற்றுமை பாராட்டுவதையும் விரும்பாதவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை விரைவிலேயே அவன் வழங்குவான். (4:151-153)

எனது இந்த எழுத்தின் காரணமாக என்னை விட்டு விலகிச் சென்று விட்ட மியான் அப்துல் ஹகீம் கான் அவர்கள் இப்போது எங்கே? எவ்வாறு இறைவன் தன் மீது நம்பிக்கை கொள்வதை தூதர்களிடத்து நம்பிக்கை கொள்வதுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றான் என்பதை இப்போது தனது கண்களைத் திறந்து அவர் பார்க்க வேண்டும். மனிதனிடம் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்கின்ற ஆற்றல், கற்களில் மறைந்து இருக்கின்ற அந்த நெருப்பைப் போன்றே வைக்கப்பட்டிருக்கின்றது என்பதே இதிலுள்ள இரகசியமாகும். தூதர், நெருப்பு மறைந்திருக்கின்ற கல் போன்றவராவார். அவர் இந்தக் கல்லின் மீது தனது கவனத்தைச் செலுத்துகின்ற அடியின் மூலமாக அந்த நெருப்பை வெளியில் கொண்டு வருகின்றார். எனவே, தூதர் என்ற இந்த கல் இல்லாமல் ஏகத்துவத்தின் நெருப்பு ஏதாவதோர் உள்ளத்தில் உருவானது என்பது ஒருபோதும் சாத்தியமற்றதாகும். ஏகத்துவத்தை தூதர் மட்டுமே பூமிக்குக் கொண்டு வருகின்றார். அவர் மூலமாகவே இது பெறப்படுகின்றது. இறைவன் மறைவாக இருக்கின்றான். அவன் தனது முகத்தை தூதர் மூலமாக காட்டுகின்றான்.

يٰۤاَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمُ الرَّسُوْلُ بِالْحَقِّ مِنْ رَّبِّكُمْ فَاٰمِنُوْا خَيْرًا لَّكُمْ ؕ وَاِنْ (10)
تَكْفُرُوْا فَاِنَّ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا

மக்களே! தூதர் உண்மையுடன் வந்துள்ளார். எனவே, நீங்கள் இத்தூதர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். உங்களுக்கு நல்லது இதில் தான் இருக்கின்றது. நீங்கள் நிராகரிப்பீர்களாயின் பிறகு இறைவன் உங்களைப் பொருட்படுத்தமாட்டான். வானம், பூமி அனைத்தும் அவனுக்குரியவையாகும். அவை அனைத்தும் அவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றன. அல்லாஹ் நன்கு அறிபவனும் நுண்ணிய ஞானமுள்ளவனும் ஆவான். (4:171).

كُلَّمَاۤ اُلْقِىَ فِيْهَا فَوْجٌ سَاَلَهُمْ خَزَنَتُهَاۤ اَلَمْ يَاْتِكُمْ نَذِيْرٌ ۝ قَالُوْا بَلٰى قَدْ جَآءَنَا نَذِيْرٌ ۙ۬ (11)
فَكَذَّبْنَا وَقُلْنَا مَا نَزَّلَ اللّٰهُ مِنْ شَىْءٍ ۖ

நிராகரிக்கும் ஏதேனும் ஒரு கூட்டத்தினர் நரகில் எரியப்படும் பொழுதெல்லாம் நரகில் நியமிக்கப்பட்டிருக்கும் மலக்குகள் அவர்களிடம் எச்சரிப்பவர் எவரும் உங்களிடம் வரவில்லையா? என்று கேட்பர்.

ஆம்! நிச்சயமாக எச்சரிப்பவர் ஒருவர் வந்தார். ஆனால், நாங்கள் அவரைப் பொய்ப்படுத்தி அல்லாஹ் எதனையும் இறக்கவில்லை என்று கூறினோம் என அவர்கள் கூறுவர். (67:9-10)

இந்த வசனங்களிலிருந்து நரகவாசிகள் நரகில் எறியப்படுவதற்கான காரணம், அவர்கள் தமது காலத்து நபிமார்களை ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததனாலேயாகும் என்பது தெரிய வருகின்றது.

اِنَّمَا الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ ثُمَّ لَمْ يَرْتَابُوْا (12)

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விடத்தும் அவனது தூதரிடத்தும் நம்பிக்கை கொண்டு பிறகு தமது நம்பிக்கையில் நிலைத்திருந்து, பின்னர் அதில் ஐயம் எதுவும் கொள்ளாமல் இருப்பர். (49:16)

பாருங்கள்! இந்த வசனங்களில் இறைவனது பார்வையில் இறைவன் மீது மட்டும் நம்பிக்கை கொள்ளாமல் இறைவன் மற்றும் அவனது தூதர் ஆகிய இருவர் மீதும் நம்பிக்கை கொள்பவரே நம்பிக்கை கொண்டவர் ஆவார் என்று கூறி இறைவன் இந்தக் கட்டுப்பாட்டை விதித்துள்ளான். பிறகு, தூதர் மீது நம்பிக்கை கொள்ளாமல் இரட்சிப்பை எவ்வாறு பெற முடியும்? மேலும், தூதர் மீது ஈமான் கொள்ளாமல் வெறுமனே ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வது என்ன பலனைத் தரப் போகின்றது?

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ், சுவீடன் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு இரண்டாவது பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். அதற்கு 'மஸ்ஜித் மஹ்மூது' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள் எல்லாருமே இந்தப் பள்ளிவாயிலைக் கட்டுவதில் அதிகமாக கலப்பற்ற தூய்மையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் - மாஷா அல்லாஹ். ஆனால், இங்கு சம்பாதிக்கக் கூடியவர்கள் ஆர்வத்துடன் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு தியாகம் செய்துள்ளனர். அவர்கள் பள்ளிவாயில் கட்டுவதில் முடிந்த அளவு பொருள் தியாகம் செய்துள்ளனர். அங்கு பெண்களும் குழந்தைகளும் கூட பின்தங்கி விடவில்லை. அல்லாஹ்வின் வீட்டைக் கட்டுவதற்காக, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதற்குரிய முன்னுதாரணத்தைக் காட்டி இருக்கிறார்கள்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பெரும்பாலான அஹ்மதிகளின் இயல்பே அவ்வாறு இருக்கிறது. பொருள் தியாகம் செய்வதற்காக அவர்களிடம் நிம்மதியின்மை காணப்படுகிறது. இறைவனுக்காகவும் ஜமாஅத்திற்காகவும் செலவு செய்வதற்கான இஸ்லாமிய ஆன்மாவை இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை சீடர் நமக்கு ஊதியிருக்கிறார்கள். எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத் மக்களின் பொருள் தியாகத்தைக் குறித்து வியப்பை வெளிப்படுத்தினார்களோ இன்றும் கூட நான் கூறியது போன்று அத்தகைய தியாகங்கள் வியப்பை ஏற்படுத்துகின்றன.

இந்தப் பள்ளிவாயிலின் கட்டடம், இரு அறைகளைக் கொண்ட தங்குமிடம், அலுவலகங்கள், நூலகம் ஆகியவை 37,500 மில்லியன் குரோனர் செலவில் உருவானது.

அல்லாஹ் பொருள் தியாகம் செய்துள்ள மக்களுக்கும், இந்தப் பள்ளிவாயில் மற்றும் காம்ப்ளக்ஸ் கட்டுவதில் எந்த வகையில் பங்கெடுத்திருந்தாலும் சரி, அத்தகைய மக்களுக்கும் சிறந்த நற்கூலியை வழங்குவானாக! பெரிய அழகிய பள்ளிவாயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியின் மக்களும் பள்ளிவாயிலின் அழகைப் பாராட்டுகின்றனர்.

மஸ்ஜிது மஹ்மூது (மால்மோ) கட்டப்படுவதற்காக ஜமாஅத் சகோதரர்களின் பொருள் தியாகங்கள் தொடர்பான சம்பவங்களை ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

பள்ளிவாயிலைக் கட்டியதன் உரிமையும் கூட அதனை இறை வணக்கம் செய்பவர்களால் நிரப்பும்போது தான் நிறைவேறும். நீங்களும் இங்கு வந்து பள்ளிவாயிலை நிரப்ப வேண்டும். இந்தப் பகுதி மக்களுக்கு தப்லீக் செய்து இஸ்லாமிய போதனையை இவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் நம் ஜமாஅத்திற்கு பள்ளிவாயில்களின் தேவை, அதன் முக்கியத்துவம், அதன் குறிக்கோள்கள், நோக்கங்கள், அதன் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியவாறு அது தொடர்பாக ஜமாஅத் சகோதரர்களுக்கு வழங்கியுள்ள முக்கிய போதனைகள்.

நாம் இந்தப் பள்ளிவாயிலைக் கட்டி விட்டோம். நமது நோக்கம் நிறைவேறி விட்டது. நமது எல்லா பணிகளும் முடிந்து விட்டன என்று கருத வேண்டாம். இந்தப் பள்ளிவாயில் கட்டிய பிறகு நமது அசல் வேலை இப்போது தொடங்கி இருக்கிறது.

இந்தப் பள்ளிவாசலைக் கட்டியதற்காக முன்னரை விட அதிகமாக நன்றியுடைமையை உங்களுக்கிடையில் அன்பு மற்றும் நேசத்தை வெளிப்படுத்துவதன் மூலம் காட்ட வேண்டும். இங்கு வசிப்பவர்கள் அனைவரும் இதனைச் செய்ய வேண்டும். உலகில் எந்த இடத்தில் வாழ்கின்ற அஹ்மதியும் பள்ளிவாயிலுக்குச் சென்றால் அந்த பள்ளிவாயிலில் இந்த உரிமையையும் நிறைவேற்றுங்கள். பள்ளிவாயிலைக் கட்டிய பிறகு முன்னரை விட அதிகமாக நீங்கள் இஸ்லாமிய போதனையை மக்களுக்கு காட்டித் தர வேண்டும்.

பள்ளிவாயிலில் இறைவணக்கம் செய்வதன் காரணமாக அசல் அழகை இறைவணக்கம் செய்பவர்களே காட்டுவர். இந்த மஸ்ஜிதின் வெளிப்படையான அழகை ஆன்மீக அழகாக மாற்றுங்கள். இது பெரும் பணியாகும். இதனை நாம் செய்ய வேண்டியதுள்ளது. இங்கு வசிப்பவர்கள் இதனை செய்ய வேண்டியதுள்ளது. இந்தப் பள்ளிவாயிலின் வெளிப்படையான அழகை உட்புறமான ஆன்மீக அழகாக மாற்ற வேண்டும். ஆன்மீக அழகு ஒரு தொடர்ச்சியை விரும்புகிறது. தொடர்ந்து செயல்படும் முயற்சியை எதிர்பார்க்கிறது.

இந்த பள்ளியின் அழகும் கூட தொழுகையாளிகளின் எண்ணிக்கையில் தான் இருக்கிறது. கலப்பற்ற முறையில் இறைவணக்கம் செய்ய விரும்புகிற தொழுகையாளிகளின் எண்ணிக்கையில் அல்லது தொழுபவர்களின் எண்ணிக்கையில் பள்ளிவாயிலின் அழகு இருக்கிறது.

ஜமாஅத்தில் ஸக்காத் கொடுப்பதன் பக்கம் கவனம் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். இஸ்லாத்தின் அடிப்படைக் கட்டளையை விட்டு விட்டு சந்தாக்களின் பக்கம் அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்று கூறுகின்றனர். இந்த எண்ணம் தவறானதாகும். நான் பல குத்பாக்களில் பல வருடமாக விரிவாகவும் சில நேரங்களில் கவனமூட்டியுள்ளேன். ஸக்காத்திற்கு கிலாஃபத் அமைப்புடன் ஆழமான தொடர்பும் இருக்கின்ற நிலையில் பிறகு நாம் எவ்வாறு கவனமூட்டாமல் அதை விட்டுவிடுவோம்.

மார்க்கத்தின் உறுதிப்பாடு இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமே கிடைக்க முடியும்; கிடைத்துள்ளது. ஏனெனில், அன்னார், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை அடிமை என்ற நிலையில் உலகில் வந்தார்கள். அன்னாரை இறைவன், இஸ்லாமிய போதனையின் உண்மையான முன்மாதிரியை நிலைநாட்டுவதற்கும் இஸ்லாத்தின் பட்டுப்போன கிளையை திரும்ப நிலைநாட்டுவதற்கும்தான் அனுப்பியுள்ளான். கிலாஃபத் அமைப்பு அன்னார் மூலமாகவே இவ்வுலகில் தொடரவிருந்தது; தொடர்ந்தது. இன்று அனைத்துலகிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமே இந்த அமைப்பு தொடர்கிறது. இதுவே சரியான இஸ்லாத்தை உலகில் பரப்புகிறது. இதுவே அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகில் பரப்புகிறது. இதுவே இறை வணக்கத்திற்காக பள்ளிவாயில்கள் கட்டுகிறது. குழப்பம், கிளர்ச்சி செய்வதற்காக பள்ளிவாயிலைக் கட்டுவதில்லை. இவை அனைத்தும் மார்க்க உறுதிபாட்டிற்குக் காரணமாக அமைகிறது.

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **சுவீடனிலுள்ள மல்மோவில் புதிதாக கட்டப்பட்டுள்ள மஸ்ஜித் மஹ்மூது பள்ளிவாயிலில் 13 மே 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு ஹிஜ்ரத் மாதம் 13 -ஆம் தேதி ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ், சுவீடன் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு இரண்டாவது பள்ளிவாயிலை கட்டுவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். அதற்கு 'மஸ்ஜித் மஹ்மூது' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள் எல்லாருமே இந்த பள்ளிவாயிலைக் கட்டுவதில் அதிகமாக கலப்பற்ற தூய்மையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் – மாஷா அல்லாஹ். இங்குள்ள ஜமாஅத் சிறிய ஜமாஅத்தாக இருக்கின்ற நிலையிலும் இது ஒரு பெரும் பணியாக இருந்தது. இந்த அடிப்படையில் அவர்களுக்கு உண்மையிலேயே இது ஒரு பெரிய திட்டமேயாகும். இங்கு பல வேலை இல்லாதவர்கள் இருக்கின்றனர். வயதானவர்கள் இருக்கின்றனர். சிறுவர்கள் இருக்கின்றனர். வீட்டில்

இருக்கக்கூடிய பெண்கள் இருக்கின்றனர். ஆனால், இங்கு சம்பாதிக்கக் கூடியவர்கள் ஆர்வத்துடன் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு தியாகம் செய்துள்ளனர். அவர்கள் பள்ளிவாயில் கட்டுவதில் முடிந்த அளவு பொருள் தியாகம் செய்துள்ளனர். அத்துடன் அங்கு பெண்களும் குழந்தைகளும் கூட பின்தங்கி விடவில்லை. அல்லாஹ்வின் வீட்டைக் கட்டுவதற்காக, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதற்குரிய முன்னுதாரணத்தைக் காட்டி இருக்கிறர்கள். எவருக்குதான் ஆசைகள் இல்லை? எவருக்குதான் தேவைகள் இல்லை.

எண்ணற்ற உலகியல் பௌதீகப் பொருள்கள் கவனத்தை ஈர்க்கின்ற இக்காலத்தில் அஹ்மதிகளின் பொருள் தியாகத்தைப் பார்த்து மனிதன் வியந்து போகின்றான். வெறும் ஒரு பள்ளிவாயில் பற்றிய கேள்வி அல்ல. பள்ளிவாயில் கட்டுவது, தொழுகை மையங்கள் கட்டுவது; வாங்குவது, பிரச்சார நிலையங்கள் கட்டுவது வாங்குவது போன்ற இவர்களின் திட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இது தவிர எண்ணற்ற செலவீனங்கள் உள்ளன. உலகில் எல்லா இடத்திலும் இந்தப் பணிகள் நடக்கின்றன. பிறகு மற்ற சந்தாக்களும் இருக்கின்றன. தமது தேவைகளையும் கட்டட நிர்மானங்களையும் நிறைவேற்றுவதுடன், நல்ல நிலையிலுள்ள அஹ்மதிகள் ஏழை நாடுகளிலுள்ள அஹ்மதிகளின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு தியாகங்கள் செய்கின்றனர் அல்லது ஏழை நாடுகளில் வாழும் அஹ்மதிகளின் பொருளாதார நிலைமைகளின் காரணமாக தியாகங்கள் செய்த போதிலும், பற்றாக்குறை ஏற்பட்டு விடுகிறது எனில், அதனையும் நல்ல நிலையிலிருக்கும் அஹ்மதிகள் நிறைவேற்றியவாறு அந்த நாடுகளிலுள்ள ஜமாஅத்தின் தேவைகளை நிறைவேற்ற உதவியும் செய்கின்றனர்.

எவ்வாறிருப்பினும், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பெரும்பாலான அஹ்மதிகளின் இயல்பே அவ்வாறு இருக்கிறது. பொருள் தியாகம் செய்வதற்காக நிம்மதியின்மை காணப்படுகிறது. இறைவனுக்காகவும் ஜமாஅத்திற்காகவும் செலவு செய்வதற்கான இஸ்லாமிய ஆன்மாவை இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை சீடர் நமக்கு கூறியிருக்கிற்ார்கள். எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத் மக்களின் பொருள் தியாகத்தைக் குறித்து வியப்பை வெளிப்படுத்தினார்களோ இன்றும் கூட நான் கூறியது போன்று அத்தகைய தியாகங்கள் வியப்பை ஏற்படுத்துகின்றன. இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ்வால் தரப்பட்ட வாக்குறுதியின் வெளிப்பாடே ஆகும். அல்லாஹ், அன்னாரின் தேவைகளை நிறைவேறுவதாக வாக்குறுதி அளித்துள்ளான்.

இந்தப் பள்ளிவாயிலின் கட்டடம், இரு அறைகளைக் கொண்ட தங்குமிடம், அலுவலகங்கள், நூலகம் ஆகியவை 37,500 மில்லியன் குரோனர் செலவில் உருவானது அல்லது தோராயமாக மூன்று அல்லது மூன்றே கால் மில்லியன் பவுண்டு என்று என்னிடம் கூறப்பட்டது. ஹால், பிரசாரகரின் இல்லம், சமையலறை போன்றவையும் உருவாக்கப்பட்டுள்ளன. ஹாலின் இறுதிக்கட்டப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் அதிகமாகவே செலவாகும் என்பது நிர்வாகத்தின் கருத்தாக உள்ளது. அதாவது 8 அல்லது 10 மில்லியன் குரோனர் இன்னும் அதிகமாக செலவாகக் கூடும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெரும்பாலான திட்டங்களின் கணிசமான பணிகளை வகாரே அமல் மூலமாக நாமே செய்து வருகின்றோம். இந்த அடிப்படையில் செலவு கொஞ்சம் மிச்சமாகிறது. தன்னார்வத் தொண்டர்கள் பணியாற்றுகிறார்கள். சிலர் இரவு பகலாக இங்கு தங்கி இருந்தவாறு அல்லது சிறிது நேரம் மட்டுமே வீட்டிற்குச் சென்று பிறகு வந்து விட்டதாகவும் கூறினர். வேலை விரைவில் முடிந்து பள்ளிவாயிலைத் திறக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தனர். எனினும், சில இடங்களில் நான் கூறியது போன்று பணிகள் முழுமை அடையவில்லை. ஒப்பந்தக்காரர்கள் அல்லது கூலியாட்கள் ஒருமுறை நுழைந்தது விட்டால், பிறகு தமது விருப்பம் போல் வெளியேறி விடுகிறார்கள். இங்குள்ள நிர்வாகத்தினர் அந்த வரம்பையும் கருத்தில் கொண்டு என்னை அழைத்திருக்க வேண்டும். எவ்வாறிருப்பினும், அல்லாஹ் பொருள் தியாகம் செய்துள்ள மக்களுக்கும், இந்தப் பள்ளிவாயில் மற்றும் காம்ப்ளக்ஸ் கட்டுவதில் எந்த வகையில் பங்கெடுத்திருந்தாலும் சரி, அத்தகைய மக்களுக்கும் சிறந்த நற்கூலியை வழங்குவானாக! பெரிய அழகிய பள்ளிவாயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியின் மக்களும் பள்ளிவாயிலின் அழகைப் பாராட்டுகின்றனர். இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகையாளர்கள் மற்றும் வானொலி நிலையத்தினர் இங்கு வந்திருந்தனர். என்னிடம் அழகிய பெரிய பள்ளிவாயில் கட்டப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினர். இது இப்பகுதியின் அழகை இன்னும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளது. தியாகத்தின் ஆன்மாவை எவ்வாறு சிறுவரும் பெரியவரும் காட்டினார்கள் என்பதற்கான சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன்.

ஒரு 11 வயது சிறுமி மஸ்ஜிதிற்கு சந்தாவாக சில நூறு குரோனர்களை வழங்கினாள். வெகு காலமாக எனது கைச் செலவுக்காக சேர்த்து வைத்திருந்த பணத்தை பள்ளிவாயிலின் கட்டடப் பணிக்காக வழங்கியுள்ளேன் என்று கூறினாள். 10, 11 வயதுள்ள சிறுமி அமீர் சாஹிபிடம் அல்லது சந்தா வசூலிப்பவரிடம் வந்து 500 குரோனர்களைப் பள்ளிவாயிலின் கட்டுமானச் செலவுக்காக வழங்கினாள். அவளிடம் இருந்த இரண்டு கிளிகளை விற்று அத்தொகையைப் பள்ளிவாயில் கட்டுவதற்காக வழங்கி விட்டதாக கூறினாள். இந்த நாடுகளில் செல்லப் பிராணிகளை வளர்ப்பதில் அதிகமான ஆர்வம் இருக்கிறது. ஆனால், அஹ்மதி சிறுமி இங்குள்ள பிள்ளைகளைப் போன்று தனது செல்லப் பிராணிக்கு முன்னுரிமை தரவில்லை. மாறாக, இறைவனது பள்ளிவாயிலைக் கட்டுவதற்கு, தனது ஆர்வத்தை விட முன்னுரிமை வழங்கி விட்டாள். உண்மையில் அசல் ஆர்வம், முன்னுரிமை அல்லாஹ்வின் திருப்தியே ஆகும். அதனை அஹ்மதி பிள்ளைகள்தான் புரிந்து கொள்ள முடியும். அவர்களுக்கு சிறு வயதிலேயே, 'பள்ளிவாயில் கட்டுவதில் பங்கு பெறுபவர் சொர்க்கத்தில் தனது வீட்டை உருவாக்குகிறார்' என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கூற்றைப் பற்றிய புரியும் திறன் உருவாகி விடுகிறது.

பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஊரிலுள்ள மிகச் சிறந்த இடம் பள்ளிவாயிலாகும் என்றும், மேலும், உங்கள் வட்டாரத்தில் பள்ளிவாயிலை உருவாக்குங்கள் என்றும் கூறினார்கள்.

இதன் விளைவாகவே நாம் எல்லா இடத்திலும் பள்ளிவாயில் கட்ட முயற்சி செய்கிறோம். பல பத்திரிகையாளர்கள் என்னிடம் எங்கு சென்றாலும் இந்த இடத்தில் ஏன் பள்ளிவாயிலைக் கட்டியிருக்கிறீர்கள்? இந்த இடத்திற்கு அப்படி என்ன சிறப்பு இருக்கிறது? என்று கேட்கிறார்கள். இங்கும் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். மால்மோர்க் என்ற இடத்திற்கு எந்த சிறப்பும் இல்லை அல்லது வேறு எந்த இடத்திற்கும் எந்த சிறப்பும் இல்லை. நமது பணி பள்ளிவாயிலை உருவாக்குவதும், அதன் மூலம் அங்கிருந்த சில அஹ்மதிகள் ஒன்று திரள்வதும். அவர்கள் தமது வணக்கத்தின் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதுமாகும்.

ஒரு சிறுமி பள்ளிவாயிலில் இஃதிகாஃப் இருந்தாள். நிர்வாகம் அந்தச் சிறுமியை அணுகியபோது தனது நகையைப் பள்ளிவாயில் கட்டுவதற்காகக் கொடுத்தாள். வெளிப்படையில் அது பெரும் மதிப்புமிக்க நகை ஒன்றுமில்லை. ஆனால், அது அவளது ஒட்டு மொத்த நகையாக இருந்தது. அவரது பெற்றோர் அவளுக்கு அன்பளிப்பாக வழங்கியது. அந்தப் சிறுமி ஜமாஅத் நபரிடம் அந்த நகையைக் கொடுத்து எனது பெற்றோரிடம் நான் இந்த நகையைச் சந்தாவாக கொடுத்தது பற்றி சொல்ல வேண்டாம் என்று வலியுறுத்தினாள்.

இன்னோர் வக்ஃபே நவ் பெண்ணும் அவ்வாறே செய்தார். கைச் செலவுக்காக தரப்பட்ட பணத்தையும் தன்னிடமிருந்த எல்லா நகைகளையும் ஒரு கவரில் போட்டு ஒரு கடிதமும் எழுதி அதை பெற்றோரின் தலையணையின் கீழ் வைத்து விட்டாள். இதுவே என்னிடம் உள்ள மொத்த பொருளும் ஆகும். இறை வழியில் செலவழிப்பதற்காக இது தவிர வேறு எதுவும் என்னிடம் இல்லை என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

இன்னும் சில இளம் வயது பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களுக்கு சமீபத்தில்தான் திருமணமும் ஆகியிருந்தது. அவர்களிடம் நகை அணியும் ஆர்வம் முற்றிலும் குறைந்து விடவும் இல்லை. அவர்கள் தமது எல்லா நகைகளையும் பள்ளிவாயிலைக் கட்டுவதற்காகக் கொடுத்து விட்டனர். பல பெண்கள் இருக்கின்றனர். அவர்களின் கணவர்கள் பெரும் வாக்குறுதியையும் கொடுத்து அதனை நிறைவேற்றியும் விட்டார்கள். அந்தப் பெண்களுக்குக் கிடைத்த எல்லா நகைகளையும் கூட முழுமையாகப் பள்ளிவாயில் கட்டுவதற்காகக் கொடுத்து விட்டார்கள்.

இரண்டு பெண்களைப் பற்றி கூறப்பட்டது. அவர்களிடம் பொருள் தியாகம் செய்யும் சக்தி இல்லை. அவர்களிடம் எதுவும் இருக்கவில்லை. அவர்களுக்கு தந்தையரிடமிருந்து வாரிசுப் பொருளாக ஒரு வீடு பாகிஸ்தானில் கிடைத்திருந்தது. அதனை விற்று அதிலிருந்து கிடைத்த இலட்சக்கணக்கான தொகையைப் பள்ளிவாயில் கட்டுவதற்காகக் கொடுத்து விட்டார்கள்.

மஸ்ஜித் கட்டுவதற்காக ஒரு இளைஞர் ஒரு பெரும் தொகையை வாக்குறுதியாகக் கொடுத்திருந்தார். அதன் ஒரு பகுதி அவரது மனைவி சார்பாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், துரதிஷ்டவசமாக அந்தத் தம்பதியர் பிரிந்து விட்டனர். வாக்குறுதி சம்பந்தமாக தொடர்பு கொள்ளப்பட்ட போது இளைஞருடைய தந்தையார், அவர் அந்த பெண்ணை விட்டுப் பிரிந்து விட்டதால் அந்தப் பெண் தனது வாக்குறுதியை அவளே கொடுப்பாள் என்றார். அந்த இளைஞர், இல்லை; அவள் சார்பாகவும் நான்தான் வாக்குறுதி அளித்தேன். அவளை விட்டுப் பிரிந்தாலும் அவள் சார்பாகவும் நானே வழங்குவேன் என்றார். தொகையை முழுமையாகக் கொடுத்தும் விட்டார்.

சில இடங்களில் எத்தகைய மக்களை நாம் பார்க்கிறோம் என்றால், பெண்களின்அனுமதிக்கப்பட்ட உரிமையைக் கூட கொடுப்பதில்லை. கஸாவின் தீர்ப்பை ஏற்காததனால் அதற்காக தண்டனையையும் பெறுகின்றனர். ஆனால், அதனை வழங்குவது அவர்களது கடமையாக இருந்தது. சிலர் இவ்வாறு இருக்கிறார்கள். பிரிந்த பிறகும் கூட மனைவி சார்பாக செய்யப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுகின்றனர். உண்மையில் இத்தகைய மக்களே நம்பிக்கையாளர்கள் என்று கூறத்தக்கவர்கள் ஆவர்.

மால்மோ ஜமாஅத்தின் ஓர் இளைஞர் தற்காலிகப் பணியைச் செய்து வந்தார். பள்ளிவாயிலுக்கான வாக்குறுதியை அதிகரிக்குமாறு கூறப்பட்டதும் தனது வாக்குறுதியை பத்தாயிரம் குரோனாரிலிருந்து அதிகரித்து ஒரு இலட்சம் குரோனராக வாக்குறுதி கொடுத்தார். அடுத்த வாரமே ஐம்பதாயிரம் குரோனர் பணத்தைக் கொடுப்பதற்காக பள்ளிவாயிலுக்கு வந்து விட்டார். இந்தத் தொகையை எங்கிருந்து கொண்டு வந்தீர் என்று கேட்கப்பட்டது. அவரது நிலையும் அத்தகையதல்ல. வாக்குறுதியும் கூட இரண்டு வருடங்களில் நிறைவேற்றத்தக்க முறையில் பகுக்கப்பட்டதாக இருந்தது. அவர் தமது காரை விற்று விட்டதாகவும் அத்துடன் வீட்டில் சேகரித்து வைத்திருந்த பணத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டு வந்ததாகவும் கூறினார். அவரது இந்த தியாகத்தின் விளைவாக அல்லாஹ் நிரந்தரமான வேலையையும் அவருக்கு வழங்கினான். முன்னரை விட அழகிய புதிய கார் வாங்குவதற்கான வாய்ப்பினையும் வழங்கினான்.

இந்த தியாகத்தின் ஆன்மா நம்மில் பல அஹ்மதிகளிடம் குறிப்பிட்ட இடம் என்று அல்லாமல் அல்லாஹ்வின் அருளால் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. பல்வேறு நாடுகளில் பரவியுள்ள பல அஹ்மதிகள் அவ்வாறு இருக்கிறார்கள். இங்கும் கூட அதிகமான பேர் இருப்பார்கள். அவற்றில் சில உதாரணங்களை நான் கூறியுள்ளேன்.

இந்த பள்ளிவாயிலின் இடம், கட்டுமானம், இடத்தின் விஸ்தீரனம் தொடர்பாக சில விஷயங்களைக் கூறுகிறேன். பள்ளிவாயில் கட்டும் திட்டம் 1999 –ஆம் ஆண்டு தொடங்கியது. அப்போதுதான் கவுன்ஸிலுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது. அதற்காக கண்ணியத்திற்குரிய இஹ்ஸானுல்லாஹ் சாஹிப் ஐயாயிரம் சதுர மீட்டர் நிலத்தை வாங்கி ஜமாஅத்திற்கு வழங்கினார். இது சற்று மேடான பகுதியில் அமைந்துள்ளது. இது நல்ல பிரபல்யமான இடத்தில் அமைந்துள்ளது. முக்கிய நெடுஞ்சாலை இதன் வழியாகச் செல்கிறது. அது நார்வேயையும், சுவீடனையும் முழு ஐரோப்பாவுடன் இணைக்கிறது. அதுபோன்று சுவீடன் மற்றும் நார்வேயின் அனைத்து பெரிய நகரங்களையும் இணைக்கிறது. இது அதிக போக்குவரத்து உள்ள நெடுஞ்சாலையாகும்.

இரண்டாவது, பள்ளிவாயிலின் அழகான உயர்ந்த கட்டடம் வருபவர்களுக்கும் செல்பவர்களுக்கும் தூரத்திலிருந்தே தென்படுகிறது. தவ்ஹீதின் தூதுச் செய்தியை அது தருகிறது. அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு தனது கடமையை நிறைவேற்றச் செய்வானாக! தப்லீக் மூலமாகவும் இந்த பள்ளிவாயில் தவ்ஹீதைப் பரப்பும் ஓர் ஊடகமாக எப்போதும் ஆகட்டுமாக! இதன் உண்மையான அழகு அதன் மார்க்கப் போதனையின் அழகே ஆகும். எந்த நோக்கத்திற்காக அது உருவாக்கப்பட்டுள்ளதோ அது பொலிவுடன் மிளிரட்டுமாக!

இந்தக் காம்ப்ளக்ஸின் மொத்தக் கட்டுமானப் பகுதியின் அளவு 2353 சதுர மீட்டர் ஆகும். இதில் ஐந்து கட்டடங்கள் உள்ளன. மஸ்ஜித் மஹ்மூது இதன் பிரதான கட்டடமாகும் அல்லது சுமார் 1500 சதுர மீட்டர் ஆகும். 700 சதுர மீட்டரில் ஒரு விளையாட்டு ஹால் உள்ளது. இது தவிர வேறு கட்டடங்களான பள்ளிவாயில் மேலும் கீழும் இரண்டு ஹால்களைக் கொண்டது. ஒன்று ஆண்களுக்கும் இன்னொரு ஹால் பெண்களுக்கும் உரியது. பெண்களை ஏன் தனியாக வைக்கிறீர்கள் என்று ஆட்சேபனை செய்பவர்கள் இங்கு ஆட்சேபிக்கின்றன. இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்வதற்கு காரணங்களைத் தேடுபவர்களுக்கு இங்கு கணிசமான பதில் இருக்கிறது. ஒரே மஸ்ஜிதில் இரு ஹால்கள். இரண்டும் ஒன்றுபோல் அமைந்திருக்கிறது. இந்த ஹால் ஒவ்வொன்றிலும் 500 பேர் தொழலாம். இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் 1700 பேர் தொழ முடியும். இன்று வெளியிலிருந்து அதிகமான நபர்கள் வந்துள்ளதால் பள்ளிவாயில் நிரம்பி காணப்படுகிறது. ஆனால், சாதாரண நிலைமையில் இந்த இடத்தைப் பொருத்தவரை இது பெரிய பள்ளிவாயில் ஆகும். முழு நாட்டின் ஜமாஅத்தும் திரண்டாலும் கூட பாதி இடம் தொழுபவர்களுக்காக காலியாகவே இருக்கும். மேலும் கீழும் காலியாகவே இருக்கும்.

எனவே, தமது எண்ணிக்கையை அதிகமாக்குவது இங்குள்ள அஹ்மதிகளின் பொறுப்பாகும். இன்று திறப்பு விழா நடைபெறுகிறது. நானும் வந்துள்ளேன். அதிகமான நபர் வெளியிலிருந்தும் வந்திருக்கிறார்கள். எனவே, பள்ளிவாயில் மேலும் கீழும் நிரம்பி இருப்பதாகத் தெரிகிறது. வெளியிலும் மக்கள் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், பொதுவான நிலைமையில் நான் கூறியது போன்று இந்தப் பள்ளிவாயில் எவ்வளவு பெரியது எனில் முழு நாட்டின் ஜமாஅத்தும் திரண்டாலும் கூட பாதி மஸ்ஜித் வெறுமையாகவே இருக்கும். இங்குள்ள மக்கள் தமது எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இங்குள்ள மக்களிடமிருந்து இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணத்தை அகற்ற வேண்டும். அவர்களை ஏகத்துவத்தின் பக்கம் கொண்டு வாருங்கள். இது இவர்கள் மீதுள்ள அனுதாபத்தின் எதிர்பார்ப்பாகும். அது அவர்களுக்குரிய உரிமையாகும். இங்குள்ள மக்கள் அல்லது நாடு நமக்கு இடம் தந்து உதவி செய்துள்ளார்கள். அதற்காக நாம் செய்ய வேண்டிய மிகப் பெரிய பிரதியுபகாரம் இவர்களை நாம் அல்லாஹ்வின் அருகில் கொண்டு வர வேண்டும். பள்ளிவாயிலைக் கட்டியதன் உரிமையும் கூட அதனை இறைவணக்கம் செய்பவர்களால் நிரப்பும்போது தான் நிறைவேறும். நீங்களும் இங்கு வந்து பள்ளிவாயிலை நிரப்ப வேண்டும். இந்தப் பகுதி மக்களுக்கு தப்லீக் செய்து இஸ்லாமிய போதனையை இவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். இதன் பக்கமே கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரிடத்தில் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: '' இப்போது நமது ஜமாஅத்திற்கு பள்ளிவாயில்கள் மிகவும் தேவையாகும். அது இறை இல்லமாக இருக்கிறது. எந்த ஊரில் பள்ளிவாயில் உருவாகிறதோ அங்கு ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது என்று அறிந்து கொள்ளுங்கள்.''

''எங்கு எந்த ஊரில் முஸ்லிம்கள் குறைவாக இருக்கின்றார்களோ அல்லது இல்லாமல் இருக்கிறார்களோ அங்கு இஸ்லாம் வளர்ச்சி பெற வேண்டும் என்றால், ஒரு மஸ்ஜிதை உருவாக்க வேண்டும். பிறகு இறைவன் தானே முஸ்லிம்களை ஈர்த்துக் கொண்டு வருவான். (இதனால் இங்குள்ள மற்ற முஸ்லிம்களும் வருவார்கள். எண்ணிக்கையும் அதிகமாகும்.) ஆனால், மஸ்ஜிதை உருவாக்குவதில் நிபந்தனை என்னவென்றால், நிய்யத் கலப்பற்றதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்காக கட்டப்பட வேண்டும். சுய நோக்கங்கள் அதில் தலையிடக் கூடாது. அப்போதுதான் இறைவன் பரக்கத்தை வழங்குவான்.'' எப்போதும் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். முழுமையான கலப்பற்ற நிலை மற்றும் நல்ல நிய்யத்துடனும் எந்த வகையான குழப்பம் மற்றும் கிளர்ச்சியின் எண்ணம் இல்லாமலும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக மட்டுமே தியாகங்கள் செய்யப்படும் எனில், பள்ளிவாயில் கட்டப்படும் எனில் அது நிரப்பப்படும் எனில் அதில் எண்ணற்ற பரக்கத்துகள் ஏற்படுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஜமாஅத்திற்குச் சொந்தமான பள்ளிவாசல் இருக்க வேண்டும். அதில் நம் ஜமாஅத்தின் இமாம் இருக்க வேண்டும். ஜமாஅத்தில் உள்ளவர்கள் ஒன்று கூடி இந்தப் பள்ளிவாயிலில் ஜமாஅத்தாக தொழ வேண்டும்.''

'ஜமாஅத்தின் ஒருமைப்பாட்டில் பெரும் பரக்கத் உள்ளது' என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இது மிக முக்கியமான பணியாகும். அஹ்மதிகள் நினைவில் கொள்ள வேண்டும். நார்வேயில் இருப்பவர்களாயினும், டென்மார்க்கில் இருப்பவர்களாயினும், உலகில் மற்ற நாடுகளைச் சார்ந்தவர்களாயினும் அவர்கள் மஸ்ஜிதை நிரப்புவதன் நோக்கம் ஜமாஅத்தின் ஒருமைப்பாடு ஆகும். எனவே, இந்த ஒருமைப்பாட்டை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பிளவு ஏற்படும்போது மக்கள் பல்வேறு துண்டுகளாகப் பிரிந்து விடுகின்றனர்.'' இது ஒற்றுமை ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டிய நேரமாகும். ஒற்றுமை, ஒருமைப்பாடு, அன்பு, நேசம் ஆகியவற்றில் முன்னேறுங்கள். சின்னச்சின்ன விஷயங்களை அலட்சியப்படுத்தி விடுங்கள்.'' சின்னச் சின்ன விஷயங்களில் ஏற்படும் சண்டை சச்சரவு, தவறான எண்ணம் ஆகியவற்றிற்கு தீர்வு காணுங்கள்.

''பிரிவினைக்குக் காரணமான சின்னச் சின்ன விஷயங்களைக் கண்டும் காணாமல் விட்டு விடுங்கள்'' என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். (மல்:பூஸாத் தொகுதி 7, பக்கம் 119-120; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்திருக்கிறோம். எனவே, முஸ்லிம்கள் மறந்து விட்ட இஸ்லாமிய போதனைகளை இன்னும் சொல்வதாயின், அதில் அவர்கள் பல்வேறு நூதனங்களைப் பரப்பி பிரிவினை ஏற்படுத்தும் காரியங்களில் ஈடுபட்டு இஸ்லாத்தின் கண்ணியம் ஒருபுறம் இருக்கட்டும். நல்லொழுக்கத்தின் கண்ணியத்தைக் கூட மறந்து விட்டு அமர்ந்திருக்கின்றனர். அதிலிருந்து தப்பித்து நாம் சுயநலத்திற்குப் பதிலாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் பிறரிடமிருந்து சரியான படிப்பினையைப் பெற வேண்டும். ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டும். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டும். அதற்காக அல்லாஹ்வால் கூறப்பட்ட வழிமுறையின்படி நடக்க வேண்டும். அதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகை மற்றும் பள்ளிவாயிலில் தொழுவது தொடர்பாக நமக்கு போதனை செய்திருக்கிறார்கள். அதனை நான் எடுத்து வைக்கிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதற்கு நற்கூலி வைக்கப்பட்டதற்குக் காரணம் அதன் மூலம் ஒருமைப்பாடு உருவாகிறது. அந்த ஒருமைப்பாட்டை செயல் வடிவில் கொண்டு வருவதற்கு எந்த அளவுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது எனில் பாதங்கள் கூட வரிசையாக இருக்கும் வகையில் நிற்க வேண்டும். குதிகால்களை ஒன்றுபோல் நேராக வைக்க வேண்டும். தோள்கள் ஒன்று இன்னொன்றுடன் இணைந்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவென்றால், ஒரே மனிதனைப் பின்பற்ற வேண்டும். ஒரேயொரு மனிதனைப் போன்று நேராக நிற்க வேண்டும். அதன் மூலம் ஒருவரின் ஒளிகள் பிறரையும் ஊடுருவ வேண்டும். ஒருவருக்கு அதிக ஆன்மீக பலமும் மற்றும் சிலரிடம் அது குறைவாகவும் இருக்கும். நீங்கள் ஒன்றாக நிற்பதன் மூலம் ஒருவரின் ஆன்மீக ஒளி பிறரிடம் ஊடுருவுகிறது. சுயநலம் உருவாகி விட்டால் இந்தத் தனித்தன்மை இருக்காது. (இதுவே அன்னாரின் விருப்பமாக இருந்தது.) சுயநலம் முற்றிலும் அழிந்து ஒன்றாகி விடுங்கள்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: '' நன்றாக நினைவில் கொள்ளுங்கள். மற்றவரின் ஒளிகளை ஈர்க்கும் ஆற்றல் மனிதனிடம் இருக்கிறது. இந்த ஒருமைப்பாட்டிற்காகவே தினமும் தொழுகைகளை வட்டாரத்திலுள்ள பள்ளிவாயிலில் தொழ வேண்டும். தினமும் தொழுகைகளை முஹல்லாவின் பள்ளிவாயிலிலும், வாரத்திற்கு ஒருமுறை ஊரிலுள்ள பள்ளிவாயிலிலும், வருடத்திற்கு ஒருமுறை ஈது மைதானத்திலும் ஒன்று கூட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. பூமியிலுள்ள எல்லா முஸ்லிம்களும் வருடத்திற்கு ஒருமுறை பைத்துல்லாஹ்வில் ஒன்று கூட வேண்டும் என்ற இந்த எல்லாக் கட்டளைகளின் நோக்கமும் இந்த ஒருமைப்பாடேயாகும்.'' (லெக்சர் லூதியானா. ரூஹானி கஸாயீன் தொகுதி 20, பக்கம் 281 - 282) தொழுகையிலிருந்து ஹஜ் வரை எவ்வளவு கட்டளைகள் உள்ளனவோ இந்த இறை வணக்கங்களின் நோக்கம் என்ன? முஸ்லிம்கள் ஒரே சமுதாயமாக ஆக வேண்டும் என்பதுதான். இப்போது துரதிஷ்டவசமாக அதிகமான பிரிவினைகளும் வேறுபாடுகளும் முஸ்லிம்களிடமே காணப்படுகிறது. நாம் அஹ்மதிகள் ஆவோம். நாம் தான் இந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும். உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையை எடுத்துக் கூற வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பள்ளிவாயிலின் அசல் அழகு கட்டடத்தில் இல்லை. மாறாக, கலப்பற்ற தூய்மையுடன் தொழுகின்ற தொழுகையாளிகளால் அது ஏற்படுகிறது. அது அல்லாமல் எல்லா பள்ளிவாயில்களும் வெறுமையாகவே உள்ளது. (இங்கு பிற முஸ்லிம்களின் பள்ளிகளைக் குறிப்பிடுகிறார்கள்.) ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடைய பள்ளிவாயில் மிகவும் சிறியதாக இருந்தது. பேரீச்ச மரத்தினால் கூரை வேயப்பட்டிருந்தது. மழை நேரத்தில் கூரையிலிருந்து தண்ணீர் கொட்டியது. பள்ளிவாயிலின் ஒளி தொழுகையாளியினால் ஏற்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் உலகவாதிகளும் ஒரு பள்ளிவாயிலைக் கட்டினர். இறை கட்டளையினால் அது வீழ்த்தப்பட்டது. அந்தப் பள்ளிவாயிலின் பெயர் மஸ்ஜிதே ஸரார் ஆக இருந்தது. அதாவது இடர் விளைவிக்கும் பள்ளிவாயில் ஆகும். அந்தப் பள்ளிவாயில் மண்ணோடு மண்ணாக்கப்பட்டது. பள்ளிவாயில்கள் தக்வாவிற்காக உருவாக்கப்பட வேண்டும் என்பதே பள்ளிவாயில்களைப் பொருத்தவரையில் கட்டளையாகும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 170; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.)

நிச்சயமாக தியாக உணர்வு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லாரிடமும் இருக்கிறது. இந்தப் பள்ளிவாயிலைக் கட்டுவதில் அது தென்பட்டது. குறிப்பாக பிள்ளைகளின் அப்பழுக்கற்ற தியாகமானது எல்லா செயற்கைத் தனங்களையும் விட்டு தூய்மையானது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆக்கள் மற்றும் போதனைகள் பொதுவாக நம்மிடம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தரும் புரிதிறனை வழங்கியுள்ளது. நமது பள்ளிவாயில்களை உருவாக்கும் சிந்தனை உலகியல் காரணங்களுக்காக அல்ல. முழுக்க முழுக்க இறைவணக்கம் செய்வதற்காக பள்ளிவாயில் உருவாக்கப்பட்டுள்ளது. தக்வாவின்படி புரிந்தவாறு அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்த ஒவ்வொரு பணிக்குப் பிறகும் நாம் சிந்திக்க வேண்டும். ஒரு நோக்கத்தை நிறைவேற்றிய பிறகு நாம் நமது வாழ்வின் அடிப்படை நோக்கத்தை பொருட்படுத்தாமல் இருந்து விடக்கூடாது.

நாம் அழகிய பள்ளிவாயிலைக் கட்டி விட்டோம். நமது நோக்கம் நிறைவேறி விட்டது. நமது எல்லாப் பணிகளும் முடிந்து விட்டன என்று கருத வேண்டாம். இந்த பள்ளிவாயில் கட்டிய பிறகு நமது அசல் வேலை இப்போது தொடங்கி இருக்கிறது. இங்கு வசிக்கின்ற ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ *வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்* – நாம் ஜின்களையும் மனிதர்களையும் என்ன வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் (51:57) என்பதை நினைவில் வைத்து இறை வணக்கத்தின் உரிமையை நிறைவேற்ற வேண்டும். நான் ஹதீஸில் விளக்கி வந்தது போன்று இறைவணக்கத்தின் உரிமை, மஸ்ஜிதை அதிகமாக நிரப்புவதன் மூலமே பெரும்பாலும் நிறைவேறுகிறது. பிறகு அல்லாஹ் தனது அடியார்கள் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துவதைப் பாருங்கள். அவர்களுக்கு தனது வெகுமதிகளை வழங்குவதைப் பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அல்லாஹ் நமக்கு கூறினான். பள்ளிவாயிலில் வந்து தொழுபவர்களுக்கு 27 மடங்கு அதிக நற்கூலி கிடைக்கிறது.

(புகாரி கிதாபுஸ் ஸலாத்தி பாபு ஃபஸ்லுஸ் ஸலாத்தில் ஜமாஅத்தி. ஹதீஸ் 645)

பிறகு இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக, ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''ஒருவர் தனது வீட்டிலோ கடை வீதியிலோ தொழுவதை விட ஜமாஅத்துடன் தொழுவது 25 மடங்கு சிறந்ததாகும். சில இடங்களில் 27 மடங்கு என்று வருகிறது.''

காரணம், உளூ செய்யும்போது அவர் நன்றாக உளூ செய்கிறார். பள்ளிவாயிலுக்குச் செல்கிறார். தொழுகைதான் அவரை வீட்டிலிருந்து வெளியேற்றுகிறது என்றால், அவர் அடியெடுத்து வைக்கிற ஒவ்வோர் அடிக்கும் அவரது ஓர் அந்தஸ்து உயர்த்தப்படும். அடுத்த அடி எடுத்து வைக்கும் போது அவரது ஒரு பாவம் அகற்றப்படும். எதுவரை அவர் தொழுகையின் நிலையில் இருப்பாரோ மலக்குகள் அவருக்கு இறைவனின் கருணை கிடைக்க துஆ செய்வார்கள். என்ன துஆ செய்வார்கள்? அல்லாஹ்வே! இவர் மீது கருணை காட்டுவாயாக! என்று துஆ செய்வார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஒரு மனிதர் தொழுகையை எதிர்பார்த்து அமர்ந்திருக்கிறார் என்றால், அவர் காத்திருக்கும் அந்த நேரத்திலும் தொழுகையில் இருப்பவராகவே கருதப்படுவார்.'' (புகாரி கிதாபுஸ் ஸலாத்தி பாபு ஃபஸ்லுஸ் ஸலாத்தில் ஜமாஅத்தி ஹதீஸ். 647) அவரது எதிர்பார்த்தலுக்கு நற்கூலி கிடைக்காது என்று கருதாதீர்கள். பள்ளிவாயிலுக்கு வந்து தொழுகையை எதிர்பார்த்திருப்பதும் கூட நற்கூலிக்குரியதாகும்.

பிறகு ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஒருவர் பள்ளிவாயிலுக்கு காலையும் மாலையும் செல்கிறார் என்றால், அல்லாஹ் சொர்க்கத்தில் அவரது விருந்தோம்பலுக்கான ஏற்பாட்டைச் செய்கிறான்.'' (புகாரி கிதாபுஸ் ஸலாத் பாபு ஃபஸ்லி மன் கதா இலல் மஸ்ஜிதி வமன் ராஹ ஹதீஸ். 662)

ஆக, மஸ்ஜிதிற்கு வருபவர் அல்லாஹ்வின் விருந்தாளியாக இருக்கிறார். இந்தப் பள்ளிவாயிலைக் கட்டியதற்காக முன்னரை விட அதிகமாக நன்றியுடைமையை உங்களுக்கிடையில் அன்பு மற்றும் நேசத்தை வெளிப்படுத்துவதன் மூலம் காட்ட வேண்டும். இங்கு வசிப்பவர்கள் அனைவரும் இதனைச் செய்ய வேண்டும். உலகில் எந்த இடத்தில் வாழ்கின்ற அஹ்மதியும் பள்ளிவாயிலுக்குச் சென்றால் அந்த பள்ளிவாயிலில் இந்த உரிமையையும் நிறைவேற்றுங்கள். பள்ளிவாயிலைக் கட்டிய பிறகு முன்னரை விட அதிகமாக நீங்கள் இஸ்லாமிய போதனையை மக்களுக்கு காட்டித் தர வேண்டும். அதனை செயலில் கடைபிடிக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று பள்ளிவாயில் முஸ்லிம்களை உருவாக்குவதற்குரிய ஓர் ஊடகமாக ஆகி விடும். நமது செயல் இஸ்லாமிய போதனைக்கேற்ப இல்லையெனில், நாம் இஸ்லாத்தின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்கவில்லை என்றால், மக்கள் பள்ளிவாயிலைப் பார்த்து கண்டிப்பாக அதன் பக்கம் கவனம் செலுத்துவார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று பள்ளிவாயில் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மின்னுகின்ற குவிமாடம் மக்களை ஈர்க்கின்றது. ஆனால், இந்தக் கவனம் வெளிப்படையான அழகின் பக்கமே திரும்புகிறது. பள்ளிவாயிலில் இறைவணக்கம் செய்வதன் காரணமாக அசல் அழகை இறைவணக்கம் செய்பவர்களே காட்டுவர். ஆகவே, தற்காலிக எழுச்சியினால் தியாகம் செய்திருந்தாலும் நிச்சயமாக அது மதிப்புக்குரியதே ஆகும். சிலரது தற்காலிக எழுச்சி பல வருடங்களாகப் பரவியுள்ளது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் தரப்பில் அது ஏற்பட்டுள்ளது. ஆனால், தொடர்ந்து தியாகம் செய்யும் ஒரு காலக்கட்டம் இப்போது ஆரம்பமாகி உள்ளது. இந்த பள்ளிவாயிலின் வெளிப்படையான அழகை ஆன்மீக அழகாக மாற்றுங்கள். இது பெரும் பணியாகும். இதனை நாம் செய்ய வேண்டியதுள்ளது. இங்கு வசிப்பவர்கள் இதனைச் செய்ய வேண்டியதுள்ளது. இந்தப் பள்ளிவாயிலின் வெளிப்படையான அழகை உட்புறமான ஆன்மீக அழகாக மாற்ற வேண்டும். ஆன்மீக அழகு ஒரு தொடர்ச்சியை விரும்புகிறது. தொடர்ந்து செய்யப்படும் முயற்சியை எதிர்பார்க்கிறது.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இந்த ஆன்மீக அழகின் இந்த தொடர்ச்சியை நிலை நாட்ட உறுதி கொள்ளுங்கள். நான் ஆரம்பத்தில் ஓதிய வசனங்களில் முதல் வசனம் சூரா தவ்பாவின் வசனமாகும். அதில் அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ்வின் பள்ளிவாயிலை நிரப்புபவர்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஈமான் கொள்பவர்களாவர். அவர்கள் தொழுகையை நிறைவேற்றுபவர்கள் ஸக்காத் கொடுப்பவர்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சாதவர்கள். இம்மக்களே விரைவில் நேர்வழியை பெற்றவர்களை சார்ந்தவர்களாக இருப்பர்.

எனவே, மஸ்ஜிதை உருவாக்குவதன் நோக்கம் அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வதாகும். மனிதன் எல்லா வகையான ஷிர்க்கிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும்போது தான் அல்லாஹ்வின் மீது கொள்ளும் ஈமான் முழுமை அடைகிறது. எல்லாவற்றையும் தருபவன் இறைவன்தான் என்றும் கருத வேண்டும். பிறகு இறுதி நாளின் மீது ஈமான் கொள்வது பற்றிய விபரங்கள் உள்ளன. மறுமை இவ்வுலகை விடச் சிறந்தது என்ற ஒரு விஷயத்தை மட்டும் மனிதன் சிந்தித்துப் பார்த்தால் பிறகு உலகத்தின் சாதாரண விஷயத்திற்காக தனது எல்லா சக்திகளையும் செலவழிப்பதற்குப் பதில் அதற்காக அழுத்தம் கொடுப்பதற்குப் பதில் மறுமையின் வெகுமதிகளுக்கு தன்னை வாரிசாக்குவதற்காக மனிதன் முயற்சி செய்யத் தொடங்கி விடுவான். அல்லாஹ் கூறுகின்றான்: وَلَدَارُ الْآخِرَةِ خَيْرٌ لِلَّذِيْنَ اتَّقَوْا *வலதாருல் ஆகிரத்தி கைருல் லில்லஸீனத்தக்கவ்* – தக்வாவை மேற்கொண்டவர்களுக்கு மறுமையின் வீடே நிச்சயமாக மிகச் சிறந்ததாகும். (11:10) ஒரு வீட்டை மனிதன் பள்ளிவாயிலைக் கட்டுவதன் மூலம் உருவாக்குகிறான். ஆனால், அந்த வீட்டை நிரப்புவது தக்வாவுடன் தொடர்புடையதாகும். எனவே, பள்ளிவாயிலைக் கட்டுவதன் கடமையும் தக்வாவுடன் செயல்படுவதன் மூலமே நிறைவேறும்.

மேலும் தக்வாவைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “ இறையச்சம் உடையவராக இருப்பதற்கு அவசியம் என்னவென்றால், பெரிய பாவங்களான விபச்சாரம், திருட்டு, மக்களின் உரிமையைப் பறித்தல், காட்டுதல், கர்வம், பிறரை இழிவாகப் பார்த்தல், கருமித்தனம் ஆகியவற்றை விடுவதில் உறுதியாக இருந்து, தீய ஒழுக்கங்களிலிருந்து விலகி நல்லொழுக்கத்தில் முன்னேற வேண்டும். தீய அசுத்தமான ஒழுக்கங்களை விட்டு விட வேண்டும். உயர்ந்த மேலான ஒழுக்கங்களைக் கடைபிடிப்பது மட்டுமின்றி அதில் முன்னேறவும் வேண்டும்.

‘மக்களுடன் நாகரிகத்துடனும், அனுதாபத்துடனும் நடந்து கொள்ளுங்கள். இதுவே நல்லொழுக்கம், தக்வா ஆகும்’ என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். மக்களுடன் அன்பு நேசத்துடன் பழக வேண்டும். இனிமையாகப் பழக வேண்டும். அனுதாபத்துடன் பழக வேண்டும். இவர் யாரென்று பாராமல், இவர் முஸ்லிமா? அல்லது முஸ்லிம் அல்லாதவரா? என்றெல்லாம் பார்க்காமல், நம்மவரா? அந்நியரா? என்று பார்க்காமல் பழகுங்கள். “இறைவனுடன் உண்மையான பற்று மற்றும் உண்மையைக் காட்டுங்கள். சேவையின் புகழுக்குரிய அந்தஸ்தை தேடுங்கள்.” இறைவனது திருப்தி அவர் மீது படத்தக்க வேலையைச் செய்ய வேண்டும். இந்த விஷயங்களால் மனிதன் இறையச்சமுள்ளவன் என்று அழைக்கப்படுகிறான். “எவர் இவ்விஷயங்களின் தொகுப்பாக இருக்கிறாரோ அவரே அசல் *முத்தகி* ஆவார். அதாவது தனித்தனியாக ஏதாவதொரு நல்லொழுக்கம் காணப்பட்டால் அவரை *முத்தகி* என்று கூற மாட்டோம்.” எல்லா நல்லொழுக்கங்களும் ஒருவரிடம் ஒருங்கிணைந்து இருந்தால் அவர் *முத்தகி* ஆக இருக்கிறார். ஒரு நன்மை செய்து விட்டோம். சந்தா கொடுத்து விட்டோம் என்பதன்று. சந்தாவும், தொழுகையும், மக்களுக்குத் தொண்டு செய்வதும், மக்களிடம் அன்பு காட்டுவதும், நல்லொழுக்கமும், நல்ல பேச்சும் இவை அனைத்தும் *முத்தகி* –யின் அடையாளங்களாகும்.

‘எல்லா வகையான உயர் நல்லொழுக்கமும் ஒருவரிடம் ஒன்று திரண்டு இருக்காத வரை ஒருவர் *முத்தகி* ஆக முடியாது’ என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 400; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, நான் கூறியதுபோன்று நமது பொறுப்புகள் அதிகமாகின்றன. இந்த பள்ளிவாயிலுக்குரிய உரிமையை வழங்குவதற்காக நமக்குள் பெரும் புரட்சியை உருவாக்க வேண்டியதுள்ளது. பிறகு தொழுகையை நிலைநாட்டுதல் பற்றி அல்லாஹ் கவனமூட்டியுள்ளான். தொழுகையை நிலைநாட்டுதல் என்பது ஐவேளை ஜமாஅத்துடன் தொழுவதாகும். எனவே, இந்தப் பள்ளிவாயிலின் அழகும் கூட தொழுகையாளிகளின் எண்ணிக்கையில் தான் இருக்கிறது. கலப்பற்ற முறையில் இறைவணக்கம் செய்ய விரும்புகிற தொழுகையாளிகளின் எண்ணிக்கையில் அல்லது தொழுபவர்களின் எண்ணிக்கையில் பள்ளிவாயிலின் அழகு இருக்கிறது.

பிறகு ஸக்காத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. ஏழைகளின் உரிமைகளின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. ஓர் உண்மையான முஃமின் அல்லாஹ் மற்றும் இறுதி நாளின் மீது ஈமான் கொள்கிறார். தொழுகையை நிலைநாட்டுதல் இறைவணக்கத்தில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றுடன் நிச்சயமாக தனது பொருளை தூய்மையாக வைத்திருப்பதற்காகவும் கவலைப்படுவார். பொருளைத் தூய்மையாக்குவதற்கு மிகச் சிறந்த வழி இறை வழியில் செலவு செய்தல் மற்றும் அவனது அடியார்களின் உரிமையை வழங்குவதற்காக செலவு செய்தல் ஆகும். பொருள் தியாகத்தின் புரிதிறனை இன்று நாம் பார்க்கிறோம். சரியான புரிதிறன் அஹ்மதியைத் தவிர வேறு எவருக்கும் இல்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் ஸக்காத் வழங்குவதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். பொருள் தியாகம் செய்வதன் பக்கமும் கவனமூட்டியுள்ளான். ஸக்காத்தின் பக்கம் குறிப்பாகவும் கவனமூட்டியுள்ளான்.

ஜமாஅத்தில் ஸக்காத் கொடுப்பதன் பக்கம் கவனம் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். இஸ்லாத்தின் அடிப்படைக் கட்டளையை விட்டு விட்டு சந்தாக்களின் பக்கம் அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்று கூறுகின்றனர். இந்த எண்ணம் தவறானதாகும். ஸக்காத் எவர்கள் மீது கடமையோ அது தொடர்பாக அவர்களுக்கு கவனமூட்டப்படுகிறது. மீண்டும் மீண்டும் கவனமூட்டப்படுகிறது. நான் பல குத்பாக்களில் பல வருடமாக விரிவாகவும் சில நேரங்களில் கவனமூட்டியுள்ளேன். ஸக்காத்திற்கு கிலாஃபத் அமைப்புடன் ஆழமான தொடர்பும் இருக்கின்ற நிலையில் பிறகு நாம் எவ்வாறு கவனமூட்டாமல் அதை விட்டு விடுவோம்.

கிலாஃபத் பற்றிய வசனத்தில் கிலாஃபத் அமைப்பு பற்றி வழிகாட்டலும் முன்னறிவிப்பும் செய்யப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த வசனத்தில் தொழுகை மற்றும் ஸக்காத் பற்றியே அல்லாஹ் கூறுகிறான். மற்ற சந்தா மற்றும் திட்டங்கள் பற்றி கூறப்படுகிறது என்றால் நான் கூறியது போன்று ஸக்காத் ஒவ்வொருவருக்கும் கடமையில்லை. அதற்கென்று சில விதிமுறைகளும் நிபந்தனைகளும் உள்ளன. அதன் மூலம் எல்லா செலவீனங்களையும் நிறைவேற்றவும் முடியாது. ஜமாஅத்தில் எவ்வளவு பரந்த பணிகள் உலக அளவில் நடக்கின்றனவோ அவற்றிற்காக மற்ற சந்தாக்களின் பக்கம் கவனமூட்டுவதும் அவசியமாகும். வஸிய்யத்தும் முறைப்படி தம்மீது கடமையாக்கிக் கொண்டு நாம் மாதாமாதம் வழங்கும் சந்தாவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கியதாகும். எவ்வாறிருப்பினும், இப்போது நான் இந்த விபரத்திற்குள் செல்லவில்லை.

தொடர்ச்சியாக சில விஷயங்களைக் குறிப்பிட்டேன். நான் இதனால் கூற விரும்புவது என்னவென்றால், பள்ளிவாயிலைக் கட்டியதுடன் நமது பொறுப்புகள் அதிகமாகின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வுடன் நமது தொடர்பை இணைப்பதன் மூலமும் இந்த கவனம் ஏற்படும். மறுமையின் மீது பார்வையை வைக்கும் போதும் இந்தக் கவனம் ஏற்படும். நமது தக்வாவின் தகுதியை உயர்த்தியவாறு அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முயற்சி செய்யும் போதும் இந்தக் கடமை நிறைவேறும். தொழுகையை நிலைநாட்டுவதன் மூலமும் படைப்பினங்களுக்குத் தொண்டாற்றுவதன் மூலமும் இதன் உரிமை நிறைவேறும். மார்க்கத்தின் உறுதிப்பாடு இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமே கிடைக்க முடியும்; கிடைத்துள்ளது. ஏனெனில், அன்னார், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை அடிமை என்ற நிலையில் உலகில் வந்தார்கள். அன்னாரை இறைவன், இஸ்லாமிய போதனையின் உண்மையான முன்மாதிரியை நிலைநாட்டுவதற்கும் இஸ்லாத்தின் காய்ந்து போன கிளையை திரும்ப நிலைநாட்டுவதற்கும்தான் அனுப்பியுள்ளான். அன்னார் காத்தமுன் குலஃபாவும் ஆவார்கள். மேலும் இஸ்லாத்தின் அழகு என்னவென்று உலகிற்கு கூறுவதற்காகவும் வந்தார்கள். ஆகவே, அன்னார் வந்ததன் நோக்கம் உலகம் இஸ்லாத்தின் அழகைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

நான் ஓதிய இரண்டாவது வசனம் சூரா ஹஜ் உடைய வசனம் ஆகும். இதில் அல்லாஹ் யாருக்கு உறுதிப்பாட்டை வழங்குவானோ அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அவர்களுக்கு என்னென்ன சிறப்புகள் இருக்கும் எனில் அவர்களிடம் தொழுகை நிலைநாட்டப்பட்டு இருக்கும். ஸகாத் வழங்குவது, நன்மையைப் பரப்புவது, தீமைகளைத் தடுப்பது ஆகியவை காணப்படும். இக்காலத்தில் உலகிற்கு மார்க்க உறுதிப்பாடு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகத்தான் கிடைத்தது. கிலாஃபத் அமைப்பு அன்னார் மூலமாகவே இவ்வுலகில் தொடரவிருந்தது; தொடர்ந்தது. இன்று அனைத்துலகிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமே இந்த அமைப்பு தொடர்கிறது. இதுவே சரியான இஸ்லாத்தை உலகில் பரப்புகிறது. இதுவே அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகில் பரப்புகிறது. இதுவே இறை வணக்கத்திற்காக பள்ளிவாயில்கள் கட்டுகிறது. குழப்பம், கிளர்ச்சி செய்வதற்காக பள்ளிவாயிலைக் கட்டுவதில்லை. இவை அனைத்தும் மார்க்க உறுதிபாட்டிற்குக் காரணமாக அமைகின்றன.

அதாவது, இஸ்லாத்தின் போதனையைப் பரப்பி இஸ்லாத்தின் கண்ணியம், மரியாதை, சக்தி ஆகியவற்றை உருவாக்குகிறது. அதன் மூலம் இஸ்லாத்திற்கு சக்தியும், கண்ணியமும் கிடைக்கிறது. ஆகவே. ஒவ்வோர் அஹ்மதிக்கும் அதிகமான பொறுப்பு இருக்கிறது. இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இந்த நோக்கத்தைப் புரிந்து கொள்ளுங்கள். அதற்காக தமது உடன்படிக்கைகளை நிறைவேற்றியவாறு தமது சிந்தனைகளை இறைவனது திருப்திகேற்ப அமைக்க எப்போதும் முயற்சி செய்யுங்கள்.

இந்த வசனத்தின் ஒளியில் ஒரு விஷயத்தை முன்னிறுத்துங்கள். இறைவனது உண்மையான அடியார்கள் அல்லாஹ்விடம் உதவி கேட்கிறார்கள். பிறகு அவர்களுக்கு இறைவனிடமிருந்தே உதவி கிடைக்கிறது. மனிதன் உண்மையான நம்பிக்கை கொண்டவராக இருந்தால் இறைவனிடம் உதவிக்காக அழைத்தால் அவருக்கு உதவி கிடைக்கிறது. அவர் தனது எல்லா ஆற்றல்கள் மற்றும் திறமைகள் மனிதகுல நன்மைகக்காக செலவு செய்கிறார். இது உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளம் ஆகும். அத்துடன் இறைவனது கடமையையும் நிறைவேற்றுகிறார். இறைவன் மீது அச்சம் கொண்டவர்கள் ஈமானில் அதிகரிப்பைப் பெறுபவராகின்றனர். தக்வாவுடன் வாழ்வைக் கழிப்பவராகின்றனர். பிறருக்கும் நன்மையை வலியுறுத்துகின்றனர். தீமைகளில் இருந்து தடுக்கின்றனர்.

ஆக, இந்த விஷயங்களை புரிபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றுபவர்களாகவும் ஒருவருக்கொருவர் அன்பில் வளர்ச்சி காண்பவர்களாகவும், தப்லீக்கின் கடமையை நிறை வேற்றுபவர்களாகவும் ஆவோமாக! பொருள் தியாகத்தின் தற்காலிக எழுச்சி மட்டுமே நம்மிடம் இருக்கக்கூடாது. மாறாக ஆன்மீக முன்னேற்றத்தின் நிரந்தரமான உணர்வை தொடரச் செய்பவர்களாகவும் ஏற்படுத்துபவர்களாகவும் நாம் ஆவோமாக! நாம் அதன் மூலமாகத்தான் இக்காலத்தின் இமாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை சீடருடன் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற முடியும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை ஒவ்வொருவருக்கும் வழங்குவானாக!

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் 13 –வது வருடாந்திர அமைதி மாநாட்டில் அமீருல் மு.்மினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்பத்துல் மஸீஹ் அய்யதஹு.ுல்லாஹு.ுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அருளுக்குரிய பங்கேற்பு. இஸ்லாத்தின் அழகான மற்றும் ஈடிணையற்ற போதனைக்கேற்ப உலகில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக ஹு.ுஸு.ூர் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

**அறிக்கை : ஹா.்பிஸ் முஹம்மது ஸ.்பருல்லாஹ் ஆஜிஸ் - அல் .்பஸ்ல் இன்டர்நேஷனல் 22 ஏப்ரல் 2016, பக்கம் 13,14**

(தொகுதி 1, இதழ் 10 -ன் தொடர்ச்சி...)

ஹு.ுஸு.ூர் அய்யதஹு.ுல்லாஹு.ுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்: இதுபோன்ற தவறுகளை சரி செய்வதற்காகத்தான் அல்லாஹ் காலத்தின் இமாமாகிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரை அனுப்பி வைத்துள்ளான் என்று அஹ்மதிகளாகிய நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். மார்க்கப் போர்களுக்கான காலம் இப்போது கடந்து விட்டது. மனிதன் அமைதியுடனும் நிம்மதியாகவும் பரஸ்பரம் ஒருவருக்கு மற்றவர் மீது இருக்கும் உரிமையைச் செலுத்தியவாறு ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்றே அவர்கள் எங்களிடம் கூறியுள்ளார்கள்.

இதைப் பற்றி தமது ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியவாறு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஒருமுறை இவ்வாறு கூறினார்கள்: “இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கேற்ப மார்க்கத்திற்கு இரு பகுதிகள் இருக்கின்றது அல்லது மார்க்கத்தின் அடிப்படையானது இரண்டு தூண்களில் நிலைத்திருக்கின்றது என்றும் கூறலாம். முதலாவது, ஏக இறைவனை முழுமையான உறுதியுடன் அடையாளங் கண்டு கொள்வதாகும். கலப்பற்ற மனத்தூய்மையுடன் அவன் மீது அன்பு கொள்வதாகும். அவன் மீது அன்பு கொள்வது, அவனுக்கு கட்டுப்பட்டு நடப்பது தொடர்பான அனைத்து எதிர்பார்ப்புகளையும் முன்னிறுத்தியவறு அவனுக்காக கட்டுப்பட்டு நடங்கள். இரண்டாவது விஷயம், அவனது படைப்புகளுக்கு தொண்டு செய்வதாகும். உங்களது எல்லா ஆற்றல்களையும் தகுதிகளையும் மற்றவர்களுக்கு தொண்டு செய்வதில் ஈடுபடுத்துங்கள். மேலும், எவர் உங்களுக்கு நன்மை செய்கின்றாரோ அதற்குப் பகரமாக நீங்களும் அவருக்கு நன்றி செலுத்தியவாறு அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அப்படிப்பட்டவர் அரசராக இருந்தாலும் அல்லது ஆட்சியாளராக இருந்தாலும் அல்லது பொதுமக்களாக இருந்தாலும் சரியே. இவர்கள் அனைவரிடமும் எப்போதும் அன்பின் தொடர்புகளை உறுதிப்படுத்த வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள், “நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு(கொடுப்பதைப் போல)க் கொடுக்கவும் கட்டளையிடுகின்றன்” *(16:91)* என்ற வசனத்திற்கு விளக்கம் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: நீங்கள் முழு மனித இனத்துடனும் நீதியுடன் நடந்து கொள்வதையே இறைவன் விரும்புகின்றான். இதன் மூலம் முஸ்லிம்களுக்கு, உங்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளாதவரிடமும் நீங்கள் நல்ல முறையில் நடந்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கட்டளையிடப் -பட்டிருக்கின்றது. இந்த வசனம் முஸ்லிம்களிடம் அவர்கள் இறைவனின் படைப்பினங்களிடம் எத்தகைய அனுதாப உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றால் அவர்களை தமது நெருங்கிய உறவினர்கள் போன்று கருதியவாறு ஒரு தாய் தனது குழந்தைகளுடன் நடந்து கொள்வது போன்று நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. இங்கு ஹு.ுஸு.ூர் (அலை) அவர்கள் கூறுவது என்னவென்றால், ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற மனிதர்களிடம் அவர்களது நிறம், இனம், குலம், மதம் ஆகியவற்றின் பேதமின்றி ஒரு தாய் தனது குழந்தைகளை நேசிப்பது போன்று நேசிக்க வேண்டும். ஏனென்றால், இது அன்பு கொள்வதன் கலப்பற்ற மிக உயர்ந்த வகையாகும். ஏனென்றால் இதற்கு கீழுள்ள மற்ற தகுதியில் இருக்கும் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு நன்மை செய்யும்போது நன்மை செய்பவரும்கூட தனது பேருபகாரத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அதற்குப் பகரமாக தனக்கும் நன்மை செய்ய வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கலாம். ஆனால், ஒரு தாய்க்கு தனது குழந்தைகள் மீதுள்ள அன்பு சுயநலமற்றதாகும். தனது ஒவ்வொரு குழந்தையுடனும் உள்ள உறவு எத்தகைய தனித்தன்மையைக் கொண்டதாக இருக்கின்றது என்றால் அவள் தன் குழந்தைகளுக்காக தன்னிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்வதற்கு எப்போதும் தயாராக இருப்பாள். அவர் அதற்காக எந்தவொரு பிரதிபலனையும் வேண்டுவதில்லை. எவராவது அவரைப் புகழ்ந்து கூற வேண்டும் என்ற எந்தவொரு விருப்பமும் அவருக்கு இருப்பதில்லை. எனவே, இதுவே அன்பு கொள்வதன் உச்சக்கட்ட அளவுகோலாகும். இதனையே இஸ்லாம் போதிக்கின்றது. அதன் அடிப்படையில் ஒரு தாய் தனது குழந்தைகளை நேசிப்பது போன்று முழு மனித இனத்தையும் முஸ்லிம்கள் நேசிக்க வேண்டும் என்ற போதனையை இஸ்லாம் வழங்கியுள்ளது. இவைதான் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளாகும்.

எவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனரோ அவர்கள் அவனது பண்புகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டுள்ளான். எனவே, உண்மையில் முஸ்லிமாக இருக்கின்ற ஒருவர் அநீதியிழைப்பது என்பது சாத்தியமற்றதாகும். அவ்வாறே இஸ்லாம் எவ்வகையிலான அநீதி, கடுமையாக நடப்பது, தீவிரவாதம் ஆகியவற்றிற்கும் அனுமதி வழங்கவில்லை.

ஹு.ுஸு.ூர் அவர்கள் கூறினார்கள்: கடந்த சில வருடங்களாக நான் மீண்டும் மீண்டும் இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளின் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளேன். நான் எவற்றையெல்லாம் கூறினேனோ அவை இஸ்லாத்தின் உயரிய போதனைகளாகும் என்பதை பல முறை திருக்குர்ஆனின் வசனங்களைச் சான்றாக எடுத்து வைத்து நிரூபித்துள்ளேன். ஆனால், நமது அமைதியின் தூதுச் செய்திக்கு ஊடகங்கள் விரிவான முறையில் கவரேஜ் செய்யவில்லை என்பதும் உண்மையாகும். ஆனால், அதற்கு எதிரில் எல்லா வகையான அநீதியிழைத்தல், கொலை, கொள்ளை போன்றவற்றில் ஈடுபடுகின்ற குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ள அந்த சில மக்களை பற்றிய கவரேஜ் உலகளாவிய ஊடகங்களில் தொடர்ந்து காட்டப்பட்டு வருகின்றது. மேலும் அதன் பக்கம் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. ஊடகங்கள் மக்களது பொதுவான கருத்தை நிலைநாட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே, ஊடகங்கள் தங்களது இந்த ஆற்றலை நன்மைக்காகவும் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் பொறுப்புணர்வுடன் பயன்படுத்த வேண்டும். அவை இஸ்லாத்தின் உண்மையான முகத்தை உலகத்திற்கு முன்னால் எடுத்து வைக்க வேண்டும். ஊடகங்கள் சிறுபான்மையினராக இருக்கின்ற சிலரது அநீதியான செயல்களின் பக்கம் தமது கவனத்தை முழுமையாக செலுத்துவதன் மூலமாக தீவிரவாத இயக்கத்தின் அத்தகைய செயல்களை விளம்பரப்படுத்துவதற்காக ஆக்ஸிஜன் போன்று பயன்படுகின்றது. நான் கூறியது போன்று ஊடகங்கள் நல்ல விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்தினால் மிக விரைவிலேயே உலகில் ஆதிக்கம் செலுத்தி விடுகின்ற அநீதியும், காட்டுமிராண்டித்தனமும் தீவிரவாதமும் முடிவுக்கு வர ஆரம்பித்து விடுவதை நாம் பார்ப்போம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஹு.ுஸு.ூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தை விட்டும் அதன் உயர்வான போதனைகளை விட்டும் முகந்திரும்பிச் சென்று விட்ட தீவிரவாதிகள் தமது வெறுக்கத்தக்க இந்தச் செயல்களுக்கான அனுமதியை இஸ்லாத்திடமிருந்து எவ்வாறு பெற முடியும்? என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகள் எல்லா வகையான தீவிரவாதத்திலிருந்து எந்த அளவு தடுத்துள்ளது என்றால், போரின் தருணத்தில்கூட குற்றத்திற்கு ஏற்பவே தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். மேலும், பொறுமையைக் கடைபிடிப்பதும் மன்னிப்பை வெளிப்படுத்திக் காட்டுவதும்தான் சிறந்தது என்றும் அவன் கூறியுள்ளான். எனவே, கடுமை காட்டுகின்ற, அநீதியாக நடந்து கொள்கின்ற மற்றும் காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்துகின்ற அந்த அனைத்து பெயர் தாங்கி முஸ்லிம்களும் அல்லாஹ்வின் தண்டனை மற்றும் அவனது வெறுப்பிற்கே அழைப்பு விடுக்கின்றனர்.

ஹு.ுஸு.ூர் அவர்கள் கூறினார்கள்: இந்தக் காலத்தில் இஸ்லாத்தின் மீதுள்ள அச்சம் மக்களது உள்ளங்களில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் அன்பு, நேசம் மற்றும் பரிவைத்தான் வலியுறுத்துகின்றது என்பதை மிகவும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். மிகவும் தவிர்க்க முடியாத சில நிலைமைகளில் திருக்குர்ஆன் தற்காப்புப் போர் செய்வதற்கான அனுமதியை வழங்கி இருந்தாலும் அதுவும் கூட முழுக்க முழுக்க அமைதியை நிலைநாட்டுவதற்கே ஆகும்.

ஹு.ுஸு.ூர் அவர்கள் கூறினார்கள்: இன்று பெரும்பாலான அரசாங்கங்களும் பிரிவுகளும் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் போர் செய்து வருகின்ற

**EDITOR**
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
**SUB EDITOR**
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
*The Weekly* **BADAR** *Qadian*
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
**Vol. 1** **Thursday 16 JUNE 2016** **Issue No. 15**

**MANAGER**
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

அவர்களும்கூட அமைதியை நிலைநாட்டுவதற்காகத்தான் போர் செய்வதாக வாதம் செய்கின்றனர். பொதுவான தாக்கம் இவ்வாறுதான் இருந்து வருகின்றது. அதாவது, பெரும்பாலான மக்கள் பெரும் சக்திகள் தரப்பிலிருந்தும் நடக்கின்ற போர்களை விட்டும் தமது பார்வையை விலக்கிக் கொள்கின்றனர் அல்லது குறைந்தபட்சம் அவர்களது செயல்களை எந்தவொரு மார்க்கத்துடனும் கொள்கையுடனும் அவர்கள் இணைக்காமல் இருக்கின்றனர். நாம் எத்தகைய சுற்றுச்சூழலில் இருந்து வருகின்றோம் என்றால் அதில் இஸ்லாமிய போதனைகள் ஆட்சேபனைக்கு இலக்காக்கப்படுகின்றது. முஸ்லிம்கள் ஈடுபடுகின்ற எல்லா வகையான போர்களும், அவர்கள் இழைக்கின்ற கொடுமைகளும், அநீதிகளும் இஸ்லாமிய போதனைகளுடன் இணைத்துக் கூறப்படுவதை நாம் பார்க்கின்றோம். ஆனால், இஸ்லாத்தின் உண்மையான அமைதியை விரும்புகின்ற போதனைகளைப் பரப்புவதற்கு முயற்சி செய்கின்ற அந்த மக்களின் மற்றும் ஜமாஅத்துகளின் குரல்கள் கேட்கப்படுவதேயில்லை. மேலும், அவற்றிற்கு விரிவான முறையில் பொருத்தமான விளம்பரம் வழங்கப்படுவதில்லை. எனது பார்வையில் இந்த விஷயம் மிகவும் நேர்மையற்றதும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதுமாகும். இத்தகைய உலகப் பேரிடரின் சந்தர்ப்பத்தில் நாம் இந்த அடிப்படையான கொள்கையை நினைவில் வைக்க வேண்டும். அதாவது எல்லா வகையான அநீதியையும் தீமையையும் அமுக்கி விட வேண்டும். எல்லா வகையான நன்மையையும் மனிதநேயத்தையும் பரப்ப வேண்டும். இவ்வாறு தீமையால் வெகு தூரம் வரை பரவ முடியாமல் போய் விடும். அதற்கு எதிரில் நன்மையும் அமைதியும் வெகுதூரம் வரை பரவி விடும். அது நமது சமுதாயத்தை அழகானதாக ஆக்கி விடும்.

உலகிலுள்ள நல்ல விஷயங்களை மேலும் அதிகரிக்கும்படி செய்தால், இவ்வாறு அமைதி மற்றும் மனித நேயத்தின் உயர்ந்த நல்லொழுக்கங்களைக் காலில் போட்டு மிதிக்க விரும்புகின்ற அத்தகைய மக்களை நாம் வெற்றி கொள்ள முடியும். ஆனால், உலகம் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமலும் புரிந்து கொள்ளாமலும் இருக்கின்றது என்பதை நாம் பார்க்கின்றோம். இதன் காரணமாகவே ஊடகங்கள் உலக அமைதியை நிலைநாட்டுவதற்கு எதிரில் தமது பத்திரிகைகளின் சர்குலேஷனை அதிகரிப்பது மற்றும் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்குகின்றது. சிறுபான்மையினராக இருந்து வருகின்றவர்கள் இழைக்கின்ற அநீதிகளையும் கொடுமைகளையும் விளம்பரப்படுத்துகின்ற அத்தகைய ஊடகங்கள் உண்மையில் தாயிஷ் போன்ற தீய தீவிரவாத பிரிவுகளைப் பற்றிய பிரச்சாரத்தைச் செய்வதில் அவற்றிற்கு உதவி செய்வதற்குக் காரணமாக ஆகி விடுகின்றன. மாறாக, உலகில் இருக்கின்ற நல்ல விஷயங்களைச் சிறந்த முறையில் பெரிதாக எடுத்துக் காட்ட வேண்டியது அதன் கடமையாக இருக்கின்றது. ஆனால், தனது இந்தப் பணியில் அது தோல்வி அடைந்திருப்பதை நம்மால் பார்க்க முடிகின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது எத்தகைய அநீதியாக இருக்கின்றது என்றால், இது மேலும் பிரிவினை மற்றும் சண்டைகளுக்கான விதையை விதைக்கின்றது. உலகளாவிய அரசியலில் தீவிரவாதத்தை தோல்வி அடையச் செய்வதற்கு அமைதியை நிலைநாட்டுவது நமது உச்சக்கட்ட நோக்கமாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். இதற்காக எல்லா மக்களும் ஒன்றுபட்டிருப்பது அவசியமானதாகும். நீங்கள் ஒரு முஸ்லிம் கூறுவதை நம்பாமல் இருந்தால் நான் உங்கள் முன்னால் தனிச் சிறப்பு பெற்றுள்ள சில முஸ்லிம் அல்லாதவர்களின் கூற்றுக்களை எடுத்துக் கூறுகின்றேன். அவர்கள் அரசியலில் திறமை பெற்றவர்களாக இருக்கின்றனர். மேலும் அவர்கள் உலகில் அமைதி எற்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். உதாரணமாக, தீவிரவாதத்தையும் குறிப்பாக தாயிஷ் போன்ற தீவிரவாத பிரிவுகளை எப்படி தோற்கடிக்க முடியும்? என்பதை பற்றி நாம் பேசுகின்றோம். ஆஸ்திரேலியாவின் வெளி விவகாரத்துறை அமைச்சர் அவர்கள் இப்போது சில நாட்களுக்கு முன்னர் நாம் இதற்காக அறிவுப்பூர்வமாகவும் நுட்பமான முறையிலும் செயல்பட வேண்டியது அவசியமானதாகும். *Islamic State (ISIS)* உடன் போர் புரிவதற்கு சிரியாவின் அதிபர் அஸத் அவர்களையும் நாம் சேர்த்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். எனது பார்வையில் தீவிரவாதத்திற்கு எதிராக போர் புரிவதற்கே முன்னுரிமை வழங்க வேண்டும். இது பெரும் சக்திகள் உதாரணமாக ரஷ்யா மற்றும் ஈரானின் ஒத்துழைப்பு இல்லாமல் சாத்தியமற்றதாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(தொடரும்)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

(13) وَمَا مَنَعَهُمْ اَنْ تُقْبَلَ مِنْهُمْ نَفَقٰتُهُمْ اِلَّآ اَنَّهُمْ كَفَرُوْا بِاللّٰهِ وَبِرَسُوْلِهٖ

நிராகரிப்பவர்களின் தானங்கள் ஏற்றுக் கொள்ளப்படாததற்கான காரணம் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவர்கள் நிராகரிப்பதேயாகும். (9:54)

பாருங்கள்! இந்த வசனங்களிலிருந்து எவர்கள் தூதர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருக்கின்றனரோ அவர்களது செயல்கள் வீணாகி விடுகின்றன என்பது தெரிய வருகின்றது. இறைவன் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. செயல்கள் வீணாகி விடும்போது பிறகு அப்படிப்பட்டவருக்கு இரட்சிப்பு எவ்வாறு கிடைக்கும்? ☆

(14) وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَاٰمَنُوْا بِمَا نُزِّلَ عَلٰى مُحَمَّدٍ وَّهُوَ الْحَقُّ مِنْ رَّبِّهِمْ ۙ كَفَّرَ عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَاَصْلَحَ بَالَهُمْ

எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்து முஹம்மதுக்கு இறக்கப்பட்டதில் நம்பிக்கை கொள்கின்றனரோ அது அவர்களின் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையாகும். அத்தகைய மக்களின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான். அவர்களது உள்ளங்களை சீர்திருத்துவான் (47:3).

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டதன் காரணமாக இறைவன் எந்த அளவு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றான் என்றால் அப்படிப்பட்டவர்களது பாவங்களை அவன் மன்னிக்கின்றான். அவர்களது ந.ஃப்ஸ் தூய்மையடைவதற்கு அவனே பொறுப்பேற்றுக் கொள்கின்றான். அவ்வாறிருக்க, எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய தேவையில்லை என்று கூறுபவரும் தற்பெருமையுடனும் ஆணவத்துடனும் தன்னை ஒரு பொருட்டாக கருதுபவரும் எத்தகைய துர்பாக்கியசாலியாக இருக்கின்றார்?

சஅதி அவர்கள் இவ்வாறு உண்மையை கூறியுள்ளார்கள்:

محال ست سعدی کہ راہِ صفا     توان رفت جُز درپئے مصطفٰے
برد مہر آن شاہ سوئے بہشت     حرام است بر غیر بُوئے بہشت

சஅதியே! நேர்வழியில் செல்வது முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் சாத்தியமற்றதாகும். இந்த அரசரான முஹம்மது (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு ஒருவரை சொர்க்கம் வரை கொண்டு செல்கின்றது. முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றாத மற்றவர்கள் மீது சொர்க்கத்தின் நறுமணம் விலக்கி வைக்கப்பட்டிருக்கின்றது.

(ஹகீ.ஃகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 130-133)

☆ஒருமுறை தற்செயலாக இவ்வாறு நடந்தது. அதாவது தருது ஓதுவதில் அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதில் ஒரு காலம் வரை எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. ஏனென்றால், எனக்கு உறுதி இருந்தது. அதாவது, இறைவனின் வழிகள் மிகவும் நுட்பமான வழிகளாக இருக்கின்றன. நபி கரீம் (ஸல்) அவர்களை ஊடகமாகக் கொள்ளாமல் அவை கிடைக்க முடியாது. இதைப் பற்றி وَابْتَغُوْٓا اِلَيْهِ الْوَسِيْلَةَ என்று இறைவனும் கூறியுள்ளான். அப்போது சில காலம் கழிந்த பிறகு நான் கஷ்.ஃப் காட்சியில் தண்ணீர் புகட்டுகின்ற இருவர் வந்திருப்பதைப் பார்த்தேன் அவர்களில் ஒருவர் உட்புற வழியின் மூலமாகவும் இன்னொருவர் வெளிப்புற வழியாகவும் எனது வீட்டில் நுழைந்தனர். அவர்களது தோள்களில் ஒளியின் குவளைகள் இருந்தன. அவர்கள், هٰذَا بِمَا صَلَّيْتَ عَلٰى مُحَمَّدٍ அதாவது இவை நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஓதிய ஸலவாத்துகளின் அருள்களாகும் என்று கூறினார்.

☆தூதர்கள் வந்திருப்பதைப் பற்றி அறிந்து அவர்களது அழைப்பு எவர்களுக்கு எட்டியிருக்கின்றதோ அத்தகைய மக்களைப் பற்றியே இந்த அனைத்து வசனங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. எந்த மக்கள் தூதர்களைப் பற்றி முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றனரோ, மேலும் எவர்களுக்கு அந்தத் தூதர்களின் அழைப்பு எட்டவில்லையோ அவர்களைப் பற்றி நாம் எதுவும் கூற முடியாது. அவர்களது நிலைமைகளைப் பற்றிய அறிவு இறைவனுக்கு இருக்கின்றது. இறைவனின் அறிவும் அவனது நீதியும் எதிர்பார்க்கும் வகையில் அவன் அவர்களுடன் நடந்து கொள்வான்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad